இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நீங்கள் ஒன்றை அறிந்திருக்க வேண்டும் என விரும்புகிறேன். நம் முன்னோர் அனைவரும் மேகத்தின்கீழ் வழிநடந்தனர். அவர்கள் அனைவரும் கடலைக் கடந்து சென்றனர். அவர்கள் அனைவரும் மோசேயோடு இணைந்திருக்கும்படி மேகத்தாலும் கடலாலும் திருமுழுக்குப் பெற்றார்கள். அவர்கள் அனைவரும் ஒரே ஆன்மிக உணவை உண்டனர். அவர்கள் அனைவரும் ஒரே ஆன்மிகப் பானத்தைப் பருகினர். தங்களைப் பின்தொடர்ந்து வந்த ஆன்மிகப் பாறையிலிருந்து அவர்கள் பருகினார்கள். கிறிஸ்துவே அப்பாறை. (1கொரி 10 :1-4)



# கடவுளின் பெயரால் கேட்கிறேன், படுகொலைகளை நிறுத்துங்கள்!

**வத்திக்கான்:** உக்ரைன் நாட்டில் நடைபெற்றுவரும் படுகொலைகள் நிறுத்தப்படுமாறு, கடவுளின் பெயரால் கேட்டுக் கொள்கிறேன் என்று, மிகுந்த வேதனையோடு மார்ச் 13, கடந்த ஞாயிறன்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தான் கத்தோலிக்கத் திருஅவையின் தலைமைப் பணியை ஏற்ற ஒன்பதாம் ஆண்டு நிறைவு நாளாகிய மார்ச் 13, ஞாயிறு நண்பகலில் வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு மூவேளை செப உரையாற்றியபின்னர், உக்ரைன் நாட்டில் இடம் பெற்றுவரும் போர் குறித்த தன் மன வேதனையை வெளிப்படுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

போரினால் அழிக்கப்பட்டுவரும் உக்ரைன் நாட்டில், அப்போரால் பலியாகுவோர் மற்றும் பாதிக்கப்பட்டோரை நினைவு கூர்ந்த திருத்தந்தை, உக்ரைனில் இடம்பெற்றுவரும் பயங்கரமான போரால் Mariupol நகர், மறைசாட்சிகளின் நகரமாக மாறி வருகிறது என்றும் கூறினார்.

கடவுள் அமைதியின் கடவுள் மட்டுமே. அவர் போரின் கடவுள் அல்ல. வன்முறையை ஆதரிப்பவர்கள், அவரது பெயரை அவமதிக்கின்றனர் என்றும், சிறார், ஆயுதம் ஏந்தாத அப்பாவி குடிமக்கள் ஆகியோர் மீது காட்டுமிராண்டித்தனமாக கொடூரங்கள் நடத்தப்படுகின்றன என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கவலை தெரிவித்தார்.

நகரங்களை கல்லறைகளாக மாற்றுவதற்குமுன்னர், ஏற்றுக்கொள்ளப்பட முடியாத கடும் ஆயுதத் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும், போர் நிறுத்தப்படுமாறு விண்ணப்பிக்கும் பொது மக்களின் குரல்களோடு, வேதனை நிறைந்த மனதோடு என்னையும் இணைக்கின்றேன் என்றும் திருத்தந்தை கூறினார்.

துன்புறுவோரின் அழுகுரல்கள் கேட்கப் படட்டும், குண்டுவீச்சுக்களும் தாக்குதல் களும் நிறுத்தப்படட்டும், உண்மையான, மற்றும், உறுதியான பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தப்படட்டும். பாதுகாப்பான மனிதாபிமானக் கதவுகள் திறக்கப்படவும் இந்தப் படுகொலைகள் நிறுத்தப்படவும கடவுளின் பெயரால் கேட்கிறேன் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.



அனைத்து மறைமாவட்டங்களும், துறவறக் குழுமங்களும் அமைதிக்காக அதிகமாகச் செபிக்குமாறு கேட்டுக்கொண்டு, புலம் பெயர்ந்தோருக்கு உதவும் மக்களுக்கு நன்றி கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# தற்காலத்தில் நிலவும் கோவிட்-19 நெருக்கடி சூழலில் , நமது கிறிஸ்தவச் சபைகளின் பங்களிப்புப் பற்றிய பகிர்வு கருத்தரங்கு நடைபெற்றது

கோலாலம்பூர்: சமூக, பொருளாதார தூரநோக்கிற்கு மத சமூகங்கள் எவ்வாறு பங்களிக்கக்கூடும் என்பதை ஆராய, மலேசிய கிறிஸ்தவ சபைகளின் கூட்டு மன்றம் (CCM) மார்ச் 7 அன்று மூன்று புகழ்பெற்ற நபர்களுடன் ஒரு உரையாடலை ஏற்பாடு செய்தது. அந்நிகழ்வில் பங்கேற்ற பேச்சாளர்களில், பலவித பிரச்சனைகள் குறித்த சொற்பொழிவாற்றக்கூடிய பேராசிரியர் டாக்டர் முகமது தஜூடின் முகமது ரஷ்டி, புத்த அனைத்துலக கூட்டுப் பேரவையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் டத்தோ ஸ்ரீ டாக்டர் விக்டர் வீ, (Victor Wee) மற்றும் கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் ஆகியோர் அடங்குவர்.

மேற்கண்ட கலந்துரையாடல் நிகழ்வுக்கு இணைப்பாளராக மலேசிய கிறிஸ்தவ சபைகளின் கூட்டு மன்றத்தின் பொதுச் செயலாலர் அருள்திரு டாக்டர் ஹெர்மன் சாஸ்திரி அவர்கள் பொறுப்பேற்றிருந்தார். இக்கலந்துரையாடல் நிகழ்வானது, பினாங்கைச் சேர்ந்த டாக்டர் மா ஹூய் மற்றும் மைக்கல் ஹெங் சியாம் ஆகியோரின் ‘கோவிட்-19, அதன் விளைவால் எழுந்த நெருக்கடி’ என்ற தலைப்பிலான நூலினை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் லிம் தனது தொடக்க விளக்கவுரையில், பொருளாதார நிபுணர் கார்ல் போலனியின் கூற்றுப்படி, பொருளாதார ரீதியில் மூன்று பெரிய மாற்றங்கள் ஏற்பட்டதாகக் கூறினார். முதல் பெரிய மாற்றம் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கியது என்றும், இதில் உலகச் சந்தைக்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவு தலைகீழாக மாறியது என்றார். அடுத்து, இரண்டாவது பெரிய மாற்றம் 1970-ம் ஆண்டுகளில் தொடங்கியது என்றும், அந்த மாற்றத்தில் நிதி மற்றும் உண்மையான பொருளாதாரம் இடையேயான உறவு பெரும் அளவில் பாதிக்கப்பட்டது என்றும், அதன் விளைவாக, நிதி உண்மையான பொருளாதாரத்தை தன் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தது என்றும் கூறினார். மூன்றாவதாக, வெறும் லாபம் சம்பாதிப்பதை விட மனுக்குலத்தில் சுற்றுச்சூழலைப் பராமரிப்பதும் மிக முக்கியமானதாகிவிட்ட மூன்றாவது பெரிய மாற்றம் தற்போது நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவுப்படுத்தினார்.

பேராசிரியர் டாக்டர் முகமட் தஜூடின் அவர்தம் உரையில், தொடர்ந்து, இஸ்லாத்தின் இரண்டாவது கலீஃப், உமர் அல்-கத்தாப் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆன்மீகப் பிரச்சினையாகப் புரிந்துகொள்ளும் ஒரு அரசியல் தலைவருக்கு நல்ல உதாரணம் என்று டாக்டர் தஜூதீன் கூறினார். ஏனென்றால், ஆன்மீகப் பிரச்சினைகள் வெறும் சடங்குகள் மற்றும் யாத்திரைகள் தொடர்பானவை என்று பலர் நினைக்கிறார்கள். ஆண்டுதோறும் உம்ராவிற்கு (யாத்திரை) 400,000 அனுமதிகள் வழங்கப்படுவதாகவும், ஒவ்வொரு யாத்ரீகரும் உம்ராவை முடிக்க ஏற்குறைய RM10,000 செலவழிப்பதாகவும் கூறினார். அவர்



தற்போதைய மலேசியக் கல்வி முறை இன்றையச் சூழலுக்கு ஏற்புடையதல்ல என்றார். எ.கா. பூகோளமும் அறிவியலும் வரலாற்றிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளன. மற்றும் சமயமும் நன்னெறியிலிருந்துப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மாணவர்கள் விமர்சன தர்க்கரீதியாகச் சிந்திக்க முடியாதச் சூழலில், அவர்கள் கற்றுக்கொண்டதை உண்மை வாழ்க்கை பிரச்சினைகளுடன் தொடர்புப்படுத்தவும் முடியாத இக்கட்டான நிலை நிலவுகிறது என்றார்.

தொடர்ந்து, இப்பெருந்தொகை ஏழைகளுக்குப் பயன்படுத்தப்பட்டால், ஏழைகள் பிரச்சனை எளிதில் தீர்ந்துவிடும் என்றும் தெளிவுப்படுத்தினார்.

நிறைவாகக் கருத்துரைத்த, பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள், வரலாற்றின் இருண்ட தருணங்களில், அனைத்து மத சார்பிலும் இருந்து பல நல்லுள்ளங்கள் நம்பிக்கையின் கலங்கரை விளக்கங்களாக மாறினதை நினைவுகூர்ந்தார்.

# விண்ணேற்பு அன்னை பங்கில் அசாதாரண நற்கருணை பணியாளர்களுக்குப் பயிற்சி

**பெட்டாலிங் ஜெயா:** கடந்த மார்ச் 5-ம் திகதி, இங்குள்ள 'விண்ணேற்பு அன்னை' பங்கில் பணிபுரியும் 39 அசாதாரண நற்கருணை பணியாளர்களுக்குச் சிறப்பு உருவாக்கப்பிற்சி நடத்தப்பட்டது. ஏறக் குறைய மூன்று மணிநேரம் நடைபெற்ற இப்பயிற்சியானது, பங்குத்தந்தை Msgr. லெனர்ட் லெக்சன் அவர்களாலும் அங்கு தங்கியிருக்கும் அருள்பணி பீகு மத்தியூஸ் அவர்களாலும் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பலி கொண்டாட்டமானது இயேசுவை மையமாகக் கொண்டது என்றும் திருமுழுக்கின் வாயிலாக, அனைத்துப் பொதுநிலையினரும் திருப்பலி கொண்டாட்டத்தின் முழுமையாகவும் ஆக்கப்பூர்வமாகவும் பங்குகொள்ள வேண்டும் எனவும் அனைவரும் நற்கருணை மக்கள் என்பதை வலியுறுத்தினார்.

தொடர்ந்து பங்குத்தந்தை லெனர்ட் லெக்சன் அவர்கள் திருப்பலிக்குக்



இந்த நான்கு அமர்வுகளாக அமைந்த இந்த உருவாக்கப்பயிற்சியின் முதல் அமர்வை, உரோமை திருப்பலி பொதுவழிகாட்டி விதிமுறை (GIRM), மீட்பின் அருளடையாளம் மற்றும் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடான 'திருஅவை' ஆகிய ஆவணங்களின் துணையோடு அருள்பணி பீகு மத்தியூஸ் அவர்கள் நற்கருணை அருளடையாளத்தைப் பற்றி விளக்கம் அளித்தார்.

பொதுநிலையினரும் அருட்சகோதர சகோதரிகளும் முற்காலத்தில் அசாதாரண நற்கருணை பணியாளர்களாக, அருள் பணியாளர்களுக்கு உதவியாக, அதிகாரப் பூர்வமாக பணியில் அமர்த்தப்பட்டிருந்தார் என்பதை எடுத்துரைத்தார். தொடர்ந்து, கூடியிருப்போருக்கு எவ்வாறு இயேசு கிறஸ்துவின் திருவுடலும் திருஇரத்தமுமான நற்கருணையை வழங்கவேண்டும் என்பதற்கான வழிமுறைகளைத் தெளிவுபடுத்தினார். அன்று நடைபெற்ற அப்பயிற்சி இறையியல் பின்னணியில் நற்கருணை யொட்டிய நல்லதொரு பயிற்சியாக அமைந்தது என்று கருத்துரைகப்பட்டது.

நிறைவாக, அசாதாரண நற்கருணை பணியாளர்கள் கிறிஸ்தவ நன்னெறி வாழ்க்கைக்கு உட்பட்டவராகவும், முன்மாதிரியான கத்தோலிக்கராகவும் தேவையான கத்தோலிக்க போதனைகளை அறிந்தவராகவும் இருப்பது இன்றியமையாதது என்று பங்குத்தந்தை லெனர்ட் லெக்சன் அவர்கள் விளக்கம் அளித்தார்.

**இத்தவக் காலத்தில் 'நானும் கடவுளும்' என்ற இரட்டை பரிமாண அணுகுமுறையை கடந்து, கடவுள், சமூகம், நான்' என்ற முப்பரிமாணத்தில் பயணம் செய்தால் இந்த வசந்தத்தின் பயனை நம்மாலும் அனுபவிக்க முடியும்.**

# 'நற்கருணையும் திருமணமும்'

## நற்கருணை ஒரு திருமண அருளடையாளம்

'அன்பின் அருளடையாளம்' எனப்படும் தூய நற்கருணையில் இயேசு கிறிஸ்து தம்மையே வழங்குகிறார். இவ்வாறு அனைவர் மீதும் கடவுள் கொண்டுள்ள அளவில்லா அன்பை நம்மோடு பகர்கிறார். 'தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுக்க' (யோவா 15:13) இழுத்துச் செல்லப்பட்ட இயேசு, அவரது அன்பை நற்கருணையில் நாள்தோறும் வெளிப்படுத்துகிறார். தம் இடையில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு தம் சீடர்களின் காலடிகளைக் கழுவின அவருடைய தாழ்ச்சியினை நற்கருணை நமக்கு உணர்த்துகிறது.

இவ்வாறு நற்கருணை முற்றிலும் அன்பின் அருளடையாளம் எனும் வகையில் மணமகனாம் இயேசு மணமகளாகிய திருஅவையுடன் (எபே 5:31-32) கொண்டுள்ள இணைபிரியா உறவை திருமண அன்புறவில் வெளிப்படுத்துகிறார். ஆகவே, நற்கருணை என்பது நமது மீட்பின் அருளடையாளம் என்பதுபோல, அது மணமகன் மற்றும் மணமகளின் அன்பின் அருளடையாளமாகவும் என்றும் உள்ளது. திருமண அன்பு என்பது திருஅவைக்காக கிறிஸ்து கொண்டிருக்கும் அன்பின் வெளிப்பாடு. அதே வேளையில் திருமண தம்பதியரின் அருள்வாழ்வுக்கும் இணை பிரியா உறவுக்கும் ஊற்றும் உச்சமுமாக நற்கருணை உள்ளது.

திருமண அருளடையாளத்தைப் பொறுத்த வரை, திருமணத்தில் முறிவுபடா உறவை திருஅவை எதிர்பார்க்கிறது. ஏனெனில், இறையருள் என்பது மாபெரும் உறவு அனுபவம். இந்த உறவு அனுபவம் திருமண வாழ்வுக்கு ஆணிவேராக உள்ளது. கணவன் மனைவி உறவு என்பது நற்கருணையில் அப்பமும் இரசமும் கொண்டுள்ள உறவுக்கு ஒப்பாகும். தூய ஆவியார் கணவன்-மனைவி உறவை நற்கருணைக்குரிய சமூகமாக இணைக்கிறார்.

ஆகவே, நற்கருணை விருந்திற்கு வரும் தம்பதியர், நற்கருணை ஓர் அன்பின் அருளடையாளம் என்பதை நினைவில் கொண்டு, தங்களிடையே அது பிளவுபடா ஒன்றிப்பையும் அன்பையும் அளப்பரிய முறையில் ஊட்டி வளர்க்கிறது என்ற எண்ணத்தோடும் நம்பிக்கையோடும் வர வேண்டும்.

# அமல அன்னையின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணம்!

**வத்திக்கான்:** ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளை அமல அன்னையின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணிக்கும் நிகழ்வொன்றை நடத்தவிருக்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

எதிர்வரும் மார்ச் 25, வெள்ளிக் கிழமையன்று, மாலை 5 மணியளவில் புனித பேதுரு பெருங்கோவிலில் நடைபெறவிருக்கும் பாவ மன்னிப்பு வழிபாட்டில், உக்ரைன் மற்றும் ரஷ்யாவை, அமல அன்னையின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணிக்கும் நிகழ்வொன்றை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நடத்தவிருப்பதாகத் திருப்பீடச் செய்தித் தொடர்பகம் தெரிவித்துள்ளது.

மேலும், திருத்தந்தையின் சிறப்புத் தூதராக அனுப்பப்படும் கர்தினால் Konrad Krajewski அவர்கள் இந்நிகழ்வை அதே நேரத்தில், போர்த்துக்கல் நாட்டு பாத்திமாவில் நிகழ்த்துவார் என்றும் திருப்பீடச் செய்தித் தொடர்பகத்தின் இயக்குநர் Matteo Bruni அவர்கள் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவை, அமல அன்னையின் இதயத்திற்கு அர்ப்பணிக்கும் இந்நிகழ்வானது மார்ச் 25, வெள்ளிக் கிழமையன்று ஆண்டவருடைய பிறப்பு அறிவிப்பு பெருவிழாவன்று நடைபெறுவது மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளதாகவும் திருப்பீடச் செய்தித் தொடர்பகம் தெரிவிக்கிறது.



1942ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் தேதி திருத்தந்தை 12ம் பயஸ் அவர்கள் உலகம் முழுவதையும், 1952ம் ஆண்டு ஜூலை 7ம் தேதி ரஷ்ய மக்கள் அனைவரையும் புனித அமல அன்னையின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணித்தார்.

# மனமாறு.. குணமாறு!

தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிற்றுக் கிழமைக்கான இறைவனின் வார்த்தைகள் நமக்கு "மனந்திரும்பி வாழ அழைப்புத் தருகிறது. இன்றைய நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசுவிடம் சிலர், பிலாத்து பலிசெலுத்திக்கொண்டிருந்த கலிலேயரைக் கொன்றான் என்ற செய்தியைச் சொல்கின்றனர். அதற்கு இயேசு மனம் மாறாவிடில் நீங்கள் ஒவ்வொருவருமே அழிவீர்கள்" என்கிறார். இயேசுவின் இவ்வார்த்தைகள் சற்றுக் கடினமாக இருந்தாலும் அவர் நாம் அனைவரும் மனந்திரும்பி வரவேண்டும் என்று அன்போடு காத்துக்கொண்டிருக்கிறார் எனும் அருமையான செய்தியைப் பகிர்கின்றன.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் பவுலடியார் "நீங்கள் கடவுளைவிட்டு விலகி சென்ற இஸ்ரயேல் மக்கள் போன்று அல்லாமல் கடவுளை நோக்கி வரும் மக்களாக வாழவேண்டும்" (1கொரி 10:6) என்றதொரு அழைப்பினைத் தருகிறார். ஆம் கடவுளை விட்டு விலகிச் செல்வதுதான் பெரிய பாவம். விலகிச் சென்றவர்கள் மீண்டுமாக இறைவனிடம் திரும்பி வருவதே உண்மையான மனமாற்றம். ஆதலால் நாம் இருக்கின்றவராக இருக்கின்ற இறைவனிடம் திரும்பி வர வேண்டும் என்று திருஅவை நமக்கு வேண்டுகோள்விடுக்கிறது.

இன்று, நாம் நம்மில் யாராவது தீராத நோயில் விழுந்தாலோ அல்லது விபத்துக்குள்ளானாலோ அல்லது பிற காரணங்களால் இறந்துபோனாலோ உடனே 'இவன்/இவள் பாவி, அதனால் தான் இவனுக்கு/இவளுக்கு இப்படி நேர்ந்திருக்கின்றது' என்று வாய்கூசாமல் பேசத் தொடங்கிவிடுவோம். அங்கு நம்மை நாம் பெரும் புனிதராகக் காட்டிக்கொள்வோம். இயேசுவின் காலத்தில் வாழ்ந்த மக்களும் இப்படித்தான் இருந்தார்கள் (யோவா 9:2). இதனை உணர்ந்துதான் இயேசு, அவருக்கு அப்படி நேர்ந்துவிட்டது, இவருக்கு இப்படி நேர்ந்துவிட்டது, அதனால் அவர்கள் அனைவரும் பாவிகள் என்று சொல்லிக் கொண்டிருக்காமல், மனம்மாறாவிட்டால் நீங்களும் அப்படியே அழிவீர்கள் என்கின்றார். ஆதலால், யாரும் யாரையும் தீர்ப்பிட்டுக் கொண்டிருக்காமல், மனமாறுவது நல்லது.

'மனமாறாவிடில் அழிவீர்கள்' என்று சொன்ன இயேசு, ஒவ்வொருவரும் மனமாறவேண்டும் என்பதற்காகக் கடவுள் பொறுமையோடு காத்திருக்கின்றார் என்பதையும் ஓர் உவமை வழியாக எடுத்துச் சொல்கின்றார். இயேசு சொல்லும் உவமையில் மூன்று ஆண்டுகளாகியும் கனிகொடுக்காத அத்திமரத்தை வெட்டி விடுமாறு தோட்டத்தின் உரிமையாளர் தொழிலாளரிடம் சொல்லும்போது, தொழிலாளர், "இன்னும் ஓராண்டு விட்டு வைப்போம், அடுத்தாண்டு கனிகொடுத்தால் சரி, இல்லையென்றால் வெட்டி விடலாம்" என்கின்றார். தோட்ட உரிமையாளர் பொறுமையாக இருப்பது போன்று, ஆண்டவரும் நாம் மனம் மாறவேண்டும் (1பேதுரு 3:9) என்பதற்காகப் பொறுமையாக இருக்கின்றார் என்கிறார் இயேசு. கடவுளின் இந்த கனிவை நாம் பயன்படுத்திக் கொண்டு மேலும் மேலும் பாவச் சுமையை அதிகரிக்க எண்ணலாகாது. எதற்கும் ஒரு எல்லையும் அளவும் உண்டு. இதுவே, தகந்த காலம் என்பதை மனதில் ஏற்போம். ஆண்டவரிடம் திரும்பி வருவோம்.

*லூர்தம்மாள் ஆரோக்கியசாமி. காஜாங்*

**தவக்காலம் 3-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | வி.ப 3: 1-8a,13-15 |
| தி. பாடல்: | 103:1-2,3-4,6-7,8.11 |
| 2ம் வாசகம்: | 1 கொரி 10: 1-6, 10-12 |
| நற்செய்தி: | லூக்கா 13: 1-9 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை—வாரம் 3**